SUTHANTHIRA THIRUNAAL AMUDHA PERUVIZHA
TAMIL NADU

சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

**சுருக்கம்**

கூட்டுறவு – கூட்டுறவு நிறுவனங்களில் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு கடன் வழங்கப்பட்டு 31.03.2021 அன்றைய தேதியில் நிலுவையில் இருக்கும் மகளிர் சுயஉதவிக் குழுக் கடன்களை தள்ளுபடி செய்து ஆணை வெளியிடப்பட்டது – திருத்தம் – வெளியிடப்படுகிறது.

---

**கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (சிசி1)த் துறை**

அரசாணை (நிலை) எண்.32.

நாள் : 18.03.2022.
பிலவ வருடம், பங்குனி – 4.
திருவள்ளுவர் ஆண்டு, 2053.

படிக்கப்பட்டவை :

1. அரசாணை(நிலை) எண்.114, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (சிசி1)த் துறை நாள் 03.12.2021.
2. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கடிதம் ந.க. எண்.30251/2021/ மவகொ1, நாள் 07.12.2021 மற்றும் 30.12.2021.

*******

**ஆணை :**

பார்வை இரண்டில் படிக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, அரசாணை (நிலை) எண்.114, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (சிசி1)த் துறை நாள் 03.12.2021 மற்றும் அதன் இணைப்பில் உள்ள நிபந்தனைகளுக்கு பின்வரும் திருத்தங்கள் வெளியிடப்படுகின்றன:

**I அரசாணையில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள்:-**

அரசாணை (நிலை) எண்.114, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (சிசி1)த் துறை நாள் 03.12.2021-இல் **பத்தி எண்.6, பத்தி 9** என மாற்றப்படுகிறது.

மேலும், கீழ்க்கண்ட புதிய **பத்திகள் 6, 7, 8** சேர்க்கப்படுகின்றன.

**பத்தி- 6.** "மேலே பத்தி 4ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், அரசுக் கணக்கிலிருந்து பெற்று கூட்டுறவு நிறுவனங்களுக்கு வழங்கிட அதிகாரமளிக்கப்படுகிறது.

**பத்தி-7.** மேலும், பயனாளிகளின் பட்டியல் மீதான கூட்டுறவு தணிக்கைத்துறையின் தணிக்கைக்கு பின்னரே, தள்ளுபடி சான்றிதழ்கள் வழங்கப்படவேண்டும் என கூட்டுறவு சங்கங்களின் பதிவாளருக்கு அறிவுறுத்தப்படுகிறது

**பத்தி-8.** மேலும், மகளிர் சுய உதவிக்குழுக் கடன்களில், தனியர் வேறு கடன் தள்ளுபடி பெற்றிருந்தால், அவர்களை நீக்கிவிட்டு, மற்றவர்களுக்கு குழு கடன் தள்ளுபடி வழங்கவும் அரசு ஆணையிடுகிறது.

**II. அரசாணையின் இணைப்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள்:-**

| வரிசை எண் | ஏற்கனவே இணைப்பில் உள்ள நிபந்தனைகள் | திருத்தம் |
|---|---|---|
| 1. | **பத்தி (i)** கூட்டுறவு நிறுவனங்களில் வழங்கப்பட்ட மகளிர் சுயஉதவிக் குழுக் கடன்கள் மட்டும் தள்ளுபடி செய்யப்படும். | 31.3.2021 அன்று வரை நிலுவையிலுள்ள மகளிர் சுய உதவி குழுக் கடன்களில், கோவிட்-19 சிறப்பு கடனுதவி திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மகளிர் சுய உதவிக் குழு கடன்களும் அடங்கிய நிலையில், அரசிற்கு கூடுதல் செலவினம் ஏதும் ஏற்படாத வகையில் தள்ளுபடி செய்யப்படும். |

| | | |
|---|---|---|
| 2. | **<u>பத்தி (vii)</u>**<br>31.03.2021 அன்று கடன் நிலுவையாக இருந்து, அரசாணை வெளியிடப்படும் நாள் அன்றோ அல்லது அதற்கு முன்னரோ அத்தொகை முழுவதும் திரும்பச் செலுத்தப்பட்ட கடன்கள். அவை தகுதிபெறாத இனங்களாக கருதப்படும். | 31.03.2021 அன்று கடன் நிலுவையாக இருந்து, அரசாணை வெளியிடப்படும் நாள் அன்றோ அல்லது அதற்கு முன்னரோ அத்தொகை முழுவதும் திரும்பச் செலுத்தப்பட்ட கடன்கள் தகுதிபெறாத இனங்களாக கருதப்படும். |
| 3. | **<u>பத்தி (viii)</u>**<br>01.04.2021 முதல் தகுதி படைத்த கடன்களுக்கு வட்டி வசூலிக்க கூடாது. | தள்ளுபடி பெற தகுதியான கடன்களுக்கு 01.04.2021 முதல் மகளிர் சுயஉதவிக் குழுக்களிடமிருந்து வட்டி ஏதும் வசூலிக்க கூடாது. |
| 4. | **<u>பத்தி (ix)</u>**<br>கடன் தள்ளுபடி செய்யப்பட்ட சான்றிதழ் மற்றும் நிலுவையின்மை சான்று, கடன் தள்ளுபடி செய்யப்பட்டவுடன் வழங்கப்பட வேண்டும். | கடன் தொகை தள்ளுபடி செய்யப்பட்டவுடன் அக்கடன் தள்ளுபடிச் சான்று வழங்கப்பட வேண்டும். |
| 5. | **<u>பத்தி (xii)</u>**<br>அரசாணை பிறப்பிக்கப்படும் நாள் வரை நிலுவையில் உள்ள தொகையை பகுதியாக செலுத்தியது நீங்கலாகவும், இந்தப்பட்டியலில் கண்டுள்ள தகுதிகளை பூர்த்தி செய்யாத நேர்வுகளை நீக்கியும் தள்ளுபடி செய்யப்படும். | 31.03.2021 அன்று நிலுவையாக இருந்து, அதன்பின்னர் கடன் கணக்கில் பகுதியாக தொகை ஏதும் செலுத்தப்பட்டிருப்பின், அத்தொகை நீங்கலாக, அரசாணை வெளியிடப்படும் நாளில் நிலுவையாக உள்ள கடன் தொகை மட்டும் தள்ளுபடி செய்யப்படும். மேலும், இந்தப்பட்டியலில் கண்டுள்ள தகுதிகளை பூர்த்தி செய்யாத நேர்வுகளை நீக்கியும் தள்ளுபடி செய்யப்படும். |

| | | |
|---|---|---|
| 6. | **<u>பத்தி (xiii)</u>**<br>01.04.2021 மற்றும் அதன் பிறகு வழங்கப்பட்ட சுய உதவி குழுக்களுக்கான கடன்கள் தகுதிபெறாத இனங்களாக கருதப்படும். | 01.04.2021 மற்றும் அதற்கு பிறகு வழங்கப்பட்ட சுயஉதவிக் குழுக்களுக்கான கடன்கள் தள்ளுபடிக்குத் தகுதி பெறாத இனங்களாக கருதப்படும். |
| 7. | **<u>பத்தி (xvi)</u>**<br>அயல் மாவட்ட கூட்டுறவு தணிக்கை உதவி இயக்குநருக்கு வழங்கப்பட்ட பயனாளிகள் பட்டியல் அயல் மாவட்ட கூட்டுறவு தணிக்கை துறையினரால் பயனாளிகளின் விவரங்கள் சரிபார்க்கப்பட்டு கையொப்பமிடப்பட்டு ஒப்புதலளிக்கப்பட வேண்டும். இவ்வாறு, சரிபார்க்கப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்ட சுய உதவிக்குழு கடன் தள்ளுபடி பெறுவதற்கு தகுதி வாய்ந்த பயனாளிகள் பட்டியல் ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்தில் / வங்கியில் பொதுமக்களுக்கு தெளிவாகத் தெரியும் வகையில் விளம்பரப் பலகையில் பொருத்தி வெளியிட வேண்டும். இவ்விவரங்களை அந்தந்த மத்திய கூட்டுறவு வங்கியின் இணைய தளத்திலும், மாவட்ட ஆட்சியரின் இணைய தளத்திலும் வெளியிட தொடர்புடைய மண்டல இணைப்பதிவாளர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். | கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக தள்ளுபடிக்கான பட்டியல் தயாரிக்கப் பட்டதும், அதனை கூட்டுறவுத் துறை அலுவலர்கள் மற்றும் மத்தியக் கூட்டுறவு வங்கியின் பணியாளர்கள் கொண்ட குழு மூலமாக சரிபார்க்கப்பட்ட பட்டியலை சரகத் துணைப்பதிவாளர் ஒருங்கிணைத்து கூட்டுறவுத் தணிக்கை உதவி இயக்குநருக்கு வழங்க வேண்டும். அவ்வாறு கூட்டுறவுத் தணிக்கை உதவி இயக்குநருக்கு வழங்கப்பட்ட பயனாளிகள் பட்டியல் அயல் மாவட்ட கூட்டுறவு தணிக்கை துறையினரால் பயனாளிகளின் விவரங்கள் சரி பார்க்கப்பட்டு கையொப்பமிடப்பட்டு ஒப்புதலளிக்கப்பட வேண்டும். இவ்வாறு, சரிபார்க்கப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்ட சுய உதவிக்குழு கடன் தள்ளுபடி பெறுவதற்கு தகுதி வாய்ந்த பயனாளிகள் பட்டியல் ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்தில் / வங்கியில் பொதுமக்களுக்கு தெளிவாகத் தெரியும் வகையில் விளம்பரப் பலகையில் பொருத்தி காட்சிப்படுத்த வேண்டும். இவ்விவரங்களை அந்தந்த மத்திய கூட்டுறவு வங்கியின் |

| | | |
|---|---|---|
| | | இணைய தளத்திலும், மாவட்ட ஆட்சியரின் இணைய தளத்திலும் வெளியிட தொடர்புடைய மண்டல இணைப் பதிவாளர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

// ஆளுநரின் ஆணைப்படி //

முகமது நசிமுத்தின்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை - 600 010.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மாநில தலைமைக்
கூட்டுறவு வங்கி, சென்னை-600 001.
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக
வளர்ச்சி வங்கி, சென்னை-600 004.
மாநில கணக்காயர், சென்னை - 600 018. (2 நகல்கள்)
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை - 600 035. (2 நகல்கள்)
நகல்:-
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை - 600 009.
மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை - 600 009.
முதன்மை செயலாளரின் முதுநிலை முதன்மை
தனிச்செயலாளர், நிதித்துறை, சென்னை - 600 009.
கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின்
முதுநிலை முதன்மை தனிச்செயலாளர்,
கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, சென்னை - 9.
நிதி (கூ.உ.ம.நு.பா)த் துறை, சென்னை - 600 009.
கூட்டுறவு தணிக்கை இயக்குநர், சென்னை 600 035.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

18/03/2022
பிரிவு அலுவலர்.

18/3/2022